**பல்லடம் சார்பு நீதிமன்றம்**

முன்னிலை – திரு.எஸ்.சந்தானகிருஷ்ணசாமி, பி.ஏ., பி.எல்.,

சார்பு நீதிபதி, பல்லடம்

**2022–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 28–ஆம் நாள் திங்கட்கிழமை**
**திருவள்ளுவர் ஆண்டு 2053 சுபகிருது வருடம் கார்த்திகைத் திங்கள் 12–ஆம் நாள்**

**இ.வி.எண்.1/2022**

**in**

**அசல் வழக்கு எண். 370/2018**

திருமதி.சுப்பாத்தாள் ..மனுதாரர்/வாதி

/எதிர்/

1. திரு.சென்னியப்ப கவுண்டர்(இறந்துவிட்டார்)
2. திரு.சுப்பிரமணியம்(இறந்துவிட்டார்)
3. திருமதி.வசந்தாமணி
4. திருமதி.சங்கீதா
5. திருமதி.பாரதி
6. திருமதி.பழனியம்மாள்
7. திரு.சுப்பிரமணியன்
8. திருதி.ராமாத்தாள்
9 திருமதி.மகேஸ்வரி ..1 முதல் 10 எதிர்மனுதாரர்கள்/
10. திரு.வேல்ராஜ் 1 முதல் 10 பிரதிவாதிகள்

11. திரு.சுப்பிரமணியன் ..11, 12 எதிர்மனுதாரர்கள்/
12. திரு.தங்கவேல் 11, 12 பிரதிவாதிகள்

(இ.வி.எண்.168/2022 ல் 26.09.2022 ஆம் தேதி ஏற்பட்ட உத்தரவின்படி தரப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்)

10.10.2022–ஆம் தேதியன்று கோப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த மனு கடந்த 22.11.2022–ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரருக்காக வழக்கறிஞர் திரு.D.சுந்தர்ராஜ் அவர்களும், 3 முதல் 5 எதிர்மனுதாரர்களுக்காக வழக்கறிஞர் திரு.A.சின்னசாமி அவர்களும், 6 முதல் 10 எதிர்மனுதாரர்களுக்காக வழக்கறிஞர் திரு.M.பொன்னுசாமி அவர்களும் தோன்றி எடுத்துரைத்த வாதங்களைக் கேட்டும் வழக்குக் கோப்புகளைப் பரிசீலித்தும் இந்நாள்வரை நிலுவையிலிருந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## உ த் த ர வு

மனு திருத்த விபரத்தில் சொல்லியுள்ள விபரங்களைத் தாவா பிராதில் திருத்தம் மேற்கொள்ள அனுமதி கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 6 விதி 17 மற்றும் பிரிவு 151ன் கீழ் மனுதாரர் மனு தாக்கல் செய்துள்ளார்.

**01. மனு பிரமாண வாக்குமூலத்தில் சுருக்கம்**

மனுதாரர் அசல் வழக்கில் வாதி. எதிர்மனுதாரர்கள் பிரதிவாதிகள். அசல் வழக்கானது பாகப்பிரிவினை மற்றும் தனிசுவாதீனம் கோரித் தாக்கல் சய்யப்பட்டுள்ளது. மனுதாரர் வயது முதிர்ந்தவர், அவருக்கு அன்றாடம் உடல்நலம் சார்ந்த பிரச்சனைகள் எழுந்த வண்ணம் உள்ளதால் வழக்கு நடவடிக்கைகளை கவனிக்க மிகுந்த சிரமமாக உள்ளது. மனுதாரருக்கு மூட்டு வலி, முழங்கால் வலி, முதுகு வலி, நரம்புப் பிரச்சனை, இரத்த அழுத்தம், நீரிழிவு நோய், கொழுப்பு சம்பந்தப்பட்ட உபாதைகள் என அதிகப்படியான பிரச்சனைகள் உள்ளன. அதிகம் வெளியில் செல்ல இயலாததால் அடிக்கடி வழக்கறிஞரைச் சந்திக்க முடியவில்லை. மனுதாரரின் கணவருக்கும் இதய நோய் உள்ளதால் அவராலும் மனுதாரருக்கு உதய முடிவதில்லை.

**1.2.** அசல் வழக்கில் எதிர்மனுதாரர்கள் பொய்யான சங்கதிகளுடன் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளனர். தாவா சொத்துக்களைப் பொறுத்து இதுவரை எந்த பாகப்பிரிவினையும் ஏற்படவில்லை. குறிப்பிடப்பட்டுள்ள பாகப்பிரிவினை, செட்டில்மெண்ட், கிரைய ஆவணங்கள் பிரதிவாதிகளால் வாதியைத் தரப்பினாகச் சேர்க்கப்படாமல் வாதியின் பங்கைப் பறிப்பதற்காக உருவாக்கப்பட்டதாகும். மேற்படி ஆவணங்கள் அமுல்படுத்தப்படவில்லை மற்றும் மனுதாரரைக் கட்டுப்படுத்தாது. வாதி விரிவான பதிலுரை தாக்கல் செய்துள்ளார்.

**1.3.** எனவே மேற்படி ஆவணங்களில் கண்ட நபர்களைத் தரப்பினர்களாகச் சேர்த்து வழக்கைத் திருத்தம் செய்ய வேண்டியுள்ளது. தாவா 3, 4 ஆம் அட்டவணைச் சொத்துக்கள் மதிப்பு மிகுந்தவை. எனவே பிரதிவாதிகள் ஒன்று சேர்ந்து மேற்படி ஆவணங்களை மோசடியாகத் தயாரித்துள்ளனர். மேலும் 3 முதல்

5 பிரதிவாதிகள் குடும்பத்தார் மனுதாரர் தக்க நேரத்தில் சகோதரர் அருணாசலத்திற்குச் செய்த பண உதவியை மறந்தும் 31.05.2012 ஆம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தையும் மறுக்கின்றனர்.

**1.4.** 1, 2 பிரதிவாதிகளும், 3 ஆம் பிரதிவாதியின் கணவர் அருணாசலமும் கூட்டாக 15.09.1998 தேதியிட்ட பாகப்பிரிவினைப் பத்திரம், 08.02.2010, 15.02.2010 தேதிகளிட்ட பாகப்பிரிவினைப் பத்திரம், 07.07.2011 தேதியிட்ட கிரையப் பத்திரம் மற்றும் 27.12.2011 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரங்களைத் தயாரித்துள்ளனர். எனவே மேற்படி பத்திரங்கள் கண்ட நபர்களைத் தரப்பினர்களாகச் சேர்க்கக் கோரி இ.வி.எண்.168/2022 மனு தாக்கல் செய்து கடந்த 26.09.2022 தேதியிட்ட உத்தரவுப்படி தரப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளதால் தாவாவைத் திருத்தம் செய்வது அவசியமாக உள்ளது. மேற்படி திருத்தத்தை மேற்கொள்வதால் வழக்கின் தன்மையிலோ, வழக்குமூலத்திலோ மாற்றம் ஏற்படாது. எனவே இம்மனு.

**02. 3 ஆம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 4, 5 ஆம் எதிர்மனுதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்**

மனு பொய்யானது மற்றும் உண்மைக்குப் புறம்பானதாகும். எதிர்மனுதாரர் ஒப்புக் கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்ற சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்கக் கடமைப்பட்டவர். மனு பிரமாண வாக்குமூல சங்கதிகள் 1 முதல் 7 பத்திகளில் கண்டுள்ளவை உண்மைக்குப் புறம்பானதாகும். இம்மனுதாரர் ஏற்கனவே மேற்படி சங்கதிகளைக் கூறி பதிலுரை தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கில் விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில் மனுதாரர் தாவாவைத் திருத்தம் செய்வதற்காக இம்மனு தாக்கல் செய்துள்ளார். மேற்படி திருத்தமானது வழக்கின் தன்மையையும் மாற்றம் செய்யும் மற்றும் புதிய வழக்குமூலத்தையும் உருவாக்கும்.

**2.2.** திருத்தங்களானது வரையறைச் சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளவை –களாகும். காலதாமதமாகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு எதிர்மனுதாரர்களைத் துன்புறுத்துவதற்காகத் தவறாகத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் வழக்கு நடவடிக்கைகளைக் காலதாமதப்படுத்தும்

நோக்கில் தாக்கல் செய்யப்பட்டதாகும். எனவே மனுவைச் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**03. 10 ஆம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 6 முதல் 9 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்**

மனு பொய்யானது மற்றும் உண்மைக்குப் புறம்பானதாகும். எதிர்மனுதாரர் ஒப்புக் கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்ற சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்கக் கடமைப்பட்டவர். மேற்படி மனு நிலைக்கத்தக்கதல்ல. அசல் வழக்கில் 1, 2 பிரதிவாதிகள் 2015 ஆம் வருடத்திலேயே விரிவான எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளனர். அசல் வழக்கில் விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில் தவறான சங்கதிகளுடன் மனுதாரர் இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளார். தாவா சங்கதிகளிலிருந்து திருத்தம் செய்யும் சங்கதிகள் முற்றிலும் மாறுபட்டவையாகும். மனுதாரர் மேற்படி சங்கதிகளுடன் ஏற்கனவே விரிவான பதிலுரை தாக்கல் செய்துள்ளார்.

**3.2.** மேற்படி திருத்தமானது வழக்கின் தன்மையை மாற்றுவதுடன் வழக்கு மூலத்தையும் உருவாக்கும். அசல் வழக்குத் தாக்கல் செய்து 8 வருடங்கள் கழித்து தவறான சங்கதிகளுடன் இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் 2010, 2011, 1998 ஆம் வருடங்களில் அதாவது வழக்குத் தாக்கல் செய்வதற்கு முன்பாகவே ஏற்பட்டவையாகும். எனவே இம்மனுவானது காலவரையறைச் சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது.

**3.3.** மனுதாரருக்கு அசல் வழக்கில் விசாரணை துவங்கும் நோக்கம் இல்லை. இரண்டு திருத்த மனுக்களும், பதிலுரையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. வேண்டுமென்றே வழக்கு நடவடிக்கைகளைக் காலதாமதப்படுத்தும் நோக்குடன் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே தள்ளுபடி செய்யத்தக்கதாகும். மேற்படி ஆவணம் குறித்த விபரங்கள் மனுதாரருக்கு ஏற்கனவே 1, 2 எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்திருந்த எதிர்வழக்குரையிலேயே தெரியும். எனவே மனுவைத் தள்ளுபடி செய்ய வேண்டுகிறார்.

**04. தீர்வு காண வேண்டிய பிரச்சனை**

இந்த மனு அனுமதிக்கத்தக்கதா?

05. தீர்வுமுடிவு

மனுதாரர் வழக்கின் வாதி, எதிர்மனுதாரர்கள் வழக்கின் பிரதிவாதிகள். அசல் வழக்கானது பாகப்பிரிவினைக்காகத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1, 2 எதிர்மனுதாரர்/பிரதிவாதிகள் தங்களது எதிர்வழக்குரையை 13.10.2015 ஆம் தேதியில் தாக்கல் செய்துள்ளனர். 27.04.2018 ஆம் தேதியில் எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது. வழக்கு விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில் இறந்த ஒரு சில வழக்குத்தரப்பினர்களின் வாரிசுகளைச் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டதால் விசாரணை துவங்கப்படாமல் நீண்டு வந்துள்ளது.

**5.2.** சட்ட நடைமுறைகள் நிறைவடைந்த பின்பு விசாரணைக்காக 10.06.2022 ஆம் தேதியன்று வழக்கு பட்டியலில் வாய்தா ஏற்பட்டிருந்த தினத்தில் ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் மனு தாக்கல் செய்திருந்து (இ.வி.எண்.147/2022) அம்மனு 17.06.2022 ஆம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது. இதனிடையே 15.06.2022 ஆம் தேதியில் 11, 12 எதிர்மனுதாரர்களை 11, 12 பிரதிவாதிகளாகக் கட்சி சேர்க்க மனுதாரர் தாக்கல் செய்திருந்த (இ.வி.எண்.168/2022) மனு 26.09.2022 ஆம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது.

**5.3.** இ.வி.எண்.168/2022 மனு அனுமதிக்கப்பட்டதன் பின்விளைவாக பிராதில் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்களுக்காக மனு தாக்கல் செய்வதற்கு வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில் பிராதில் மேற்கொள்ள வேண்டிய அந்த திருத்தங்களுக்காகவும் இதர பல திருத்தங்களுக்காகவும் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுவில் கூறியுள்ள திருத்த விபரங்களில் வரிசை எண்.1, 2 மட்டுமே மேற்படி இ.வி.எண்.168/2022 மனு அனுமதிக்கப்பட்டதன் பின்விளைவானவைகளாகும். இதர திருத்த விபரங்கள் அனைத்தும் பிராது வாதுரை மற்றும் பரிகாரத்தில் மேற்கொள்ள வேண்டியவைகளாகும்.

**5.4.** எதிர்வழக்குரையில் கூறியுள்ள 15.09.1998 ஆம் தேதிய பாகப்பிரிவினை, 27.12.2012 ஆம் தேதிய 2 செட்டில்மெண்ட் ஆவணங்கள், 02.05.2011 ஆம் தேதிய செட்டில்மெண்ட் ஆவணம், 08.02.2010, 15.02.2010 மற்றும் 07.07.2011 ஆம் தேதிகளில் ஏற்பட்ட பாக ஆவணங்கள் ஆகியவை

குறித்தும், அந்த ஆவணங்கள் செல்லாதவை, இல்லாநிலையது மற்றும் வாதியைக் கட்டுப்படுத்தாது என்ற பரிகாரங்கள் சேர்க்கவும் மற்றும் சொத்து விபரத்தில் ஏற்பட்டுள்ள பிழையை நீக்கவும், இதர திருத்தங்கள் கோரப்பட்டுள்ளது.

**5.5.** 13.10.2015 ஆம் தேதியில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை –யிலேயே மேற்படி ஆவணங்கள் குறித்து வாதுரை செய்யப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர் தாக்கல் செய்திருந்த இ.வி.எண்.41/2021 மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் அவருடைய பதிலுரையானது 06.08.2021 ஆம் தேதியில் பெறப்பட்டுள்ளது. அந்த பதிலுரையில் மேற்கண்ட ஆவணங்களை மறுத்துக் கூறியுள்ளார். ஆகையால் பதிலுரையில் கூறியுள்ள விஷயங்களைத் திரும்பவும் பிராதில் சேர்க்கும் விதமாகத் திருத்தம் கோரப்பட்டுள்ளது. இந்தத் திருத்தம் தேவையற்றதாகும். மேலும் 13.10.2015 ஆம் தேதியிலிருந்து 3 வருட காலத்திற்குள் அந்த ஆவணங்களின் செல்லும் தன்மை குறித்துப் பரிகாரம் கேட்டுப் பிராதைத் திருத்தம் செய்ய மனு தாக்கல் செய்திருக்க வேண்டும். ஆனால் 2022 ல் தான் மனு தாக்கல் செய்துள்ளார். காலவரையறையாலும் மனுதாரர் கோரியுள்ள பரிகாரங்களைப் பொறுத்த திருத்தங்கள் பாதிக்கப்பட்டுள்ளது.

**5.6.** மேலும் 3 முதல் 7 வரையிலான திருத்தல் விபரங்கள் வழக்கின் அடிப்படைக் கட்டமைப்பை மாற்றும் விதமாகவும், புதிய வழக்கையும், வழக்குமூலத்தையும் தோற்றுவிக்கும் விதமாக உள்ளன. வ.எண்.8 ல் கூறியுள்ள திருத்தம் சொத்து விபரத்தில் ஏற்பட்டுள்ள தட்டச்சுப் பிழை தொடர்பானதாகும். ஆகையால் இதை இலகுவாக அணுகுவதே சரியானதாக இருக்கும். 2014 ஆம் வருடம் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் விசாரணையைத் துவங்க நடவடிக்கை எடுக்காமல் மனுதாரர் காலம் தாழ்த்தி வருகிறார். மனுவில் கோரியுள்ள திருத்தங்களில் வ.எண்.1, 2 இ.வி.எண்.168/2022 மனு உத்தரவின் பின்விளைவானவைகளாகும். வரிசை எண்.8 ல் உள்ள திருத்தம் எழுத்துப்பிழை தொடர்பானதாகும். ஆகையால் இந்த 3 திருத்தங்களைப் பொறுத்து மட்டும் இம்மனு அனுமதிக்கக்கூடியதாகும். வரிசை எண்.3 முதல் 7 வரையிலான திருத்தல் விபரங்கள் வழக்கின் அடிப்படைக் கட்டமைப்பை மாற்றும்விதமாகவும், புதிய வழக்கையும், வழக்குமூலத்தையும் தோற்றுவிக்கும்விதமாகவும் மேலும்

காலவரையறையால் பாதிக்கப்பட்டுள்ளதாலும் அந்தத் திருத்தங்களை அனுமதிக்க இயலாது. இந்த அடிப்படையில் இம்மனு பகுதியாக அனுமதிக்கக்கூடியதென முடிவு செய்யப்படுகின்றது.

**இறுதி முடிவு**

முடிவாக மனு திருத்தல் விபரத்தில் சொல்லியுள்ள வ.எண்.1, 2 மற்றும் 8 ல் கூறியுள்ள திருத்தங்களைப் பொறுத்து இம்மனுவைப் பகுதியாக அனுமதித்தும், வ.எண்.3 முதல் 7 வரையிலான திருத்தல் விபரங்களைப் பொறுத்து மனுவைத் தள்ளுபடி செய்தும் உத்தரவிடப்படுகின்றது.

இந்த உத்தரவு என்னால் நேரடியாகச் சொல்லப்பட்டுத் தட்டச்சரால் கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின் 2022–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 28–ஆம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

S SANTHANAKRISHNASAMY Digitally signed by S SANTHANAKRISHNASAMY Date: 2022.11.28 18:28:19 +0530

**சார்பு நீதிபதி**
**பல்லடம்**

**உபய தரப்பில் சான்றாளர்கள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை**

S SANTHANAKRISHNASAMY Digitally signed by S SANTHANAKRISHNASAMY Date: 2022.11.28 18:28:27 +0530

**சார்பு நீதிபதி**
**பல்லடம்**